# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

**ஆணை நாள். 14.08.2026**

## முன்னிலை

**திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். CP 1258/F/2023**

திரு.ரா.முத்துக்குமார், -- புகார்தாரர்

/எதிர்/

The Public Information Officer,
TamilNadu State Transport Corporation Coimbatore limited,
No.37, Mettupalayam Road, -- பொது அதிகார அமைப்பு
Coimbatore-641 043.

பொதுத் தகவல் அலுவலர்/
உதவி மேலாளர்(Mcop & கணினி),
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோ)
லிமிடெட், ஈரோடு மண்டலம்,
45, சென்னிமலை,
ஈரோடு மாவட்டம்-638 001.

******

## ஆணை

இவ்வாணையம் 07.07.2026 அன்று பிறப்பித்த உத்தரவினை தொடர்ந்து பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத் தகவல் அலுவலர் திரு.A.அரவிந்குமார், உதவி மேலாளர்(Mcop & கணினி), தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோ) லிமிடெட், ஈரோடு மண்டலம், 45, சென்னிமலை, ஈரோடு மாவட்டம்-638 001 அவர்கள் 18.08.2026 அன்று அறிக்கை சமர்ப்பிப்பதற்கு பதிலாக 14.08.2026 அன்று ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகி, ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க, பொதுத் தகவல் அலுவலர், அப்போதைய பொதுத் தகவல் அலுவலரின் எழுத்துமூல விளக்கத்தில் தமிழ்நாடு

அரசு போக்குவரத்துக் கழகம் ஈரோடு மண்டலத்தில் கடந்த 14.07.2019 முதல் 28.07.2021 முடிய 26.09.2021 முதல் 12.05.2022 முடிய மற்றும் 01.09.2022 முதல் 11.07.2023 முடிய காலங்களில் உதவி பொதுத் தகவல் அலுவலராக பணிபுரிந்ததாகவும், மனுதாரர் திரு.R.முத்துக்குமார் 25.04.2022 தேதியிட்ட தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தகவல் கோரி அனுப்பப்பட்ட கடிதத்தில் பணிபதிவேட்டின் அனைத்து பக்கங்களின் சான்றளிக்கப்பட்ட ஆவண ஒளி நகலை வேண்டும் என தெரிவித்துள்ளதாகவும், அதற்கு பணிபதிவேட்டின் நகல் செலவு தொகை ரூ.112/-க்கு D.D.எடுத்து அனுப்பிவைக்கும் பட்சத்தில் பணிபதிவேட்டின் ஆவண ஒளி நகல் வழங்கப்படும் என 09.09.2022 தேதியிட்ட கடித மூலம் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டதாகவும், அதன் பின்னர் மனுதாரரிடம் இருந்து 01.03.2023 தேதியில் பெறப்பட்ட கடிதத்தில் ரூ.112/-க்கு D.D. இணைத்து பணிபதிவேடு நகல் கோரியிருந்ததாகவும் மனுவில் தெரிவித்துள்ள தகவல் தொடர்பாக சம்மந்தப்பட்ட பிரிவான பணியாளர் பிரிவு 2-க்கு 08.03.2023 தேதியிட்ட கடிதம் மூலம் கோரப்பட்டதாகவும், மேற்கண்ட தகவல் அறியும் உரிமைச் சட்ட பிரிவிலிருந்து அனுப்பப்பட்ட கடிதத்திற்கு பணியாளர் பிரிவு 2-லிருந்து 27.03.2023 தேதியன்று பணிபதிவேட்டின் நகல் பெறப்பட்டு, அதனை மனுதாரருக்கு பதிவஞ்சல் ஒப்புகையுடன் 17.04.2023 தேதியிட்ட கடித மூலம் அனுப்பிவைக்கப்பட்டதாகவும், சம்மந்தப்பட்ட பிரிவில் தகவல் பெற்று அதன் பிறகு ஒருங்கிணைத்து மனுதாரருக்கு தகவல் வழங்க காலதாமதம் ஏற்பட்டதாகவும், மேலும் தான் ஈரோடு மண்டல அலுவலகத்தில் துணை மேலாளராக பணிபுரிந்தபோது தணிக்கை பிரிவு, கணக்கு பிரிவு மற்றும் வைப்புநிதி ஆகியவைகளுடன் கூடுதலாக உதவி பொதுத் தகவல் அலுவலர் பணிஒதுக்கீடு செய்யப்பட்டு பணி மேற்கொண்டதாகவும், மனுதாரருக்கு தகவல் வேண்டுமென்றே காலதாமதமாக வழங்க வேண்டும் என்ற நோக்கத்தில் இச்செயலை செய்யவில்லை என்று தெரிவித்த, எழுத்துமூல விளக்கத்தினை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். இதனை ஆணையம் பரிசீலனை செய்து கீழ்க்கண்ட உத்தரவினை பிறப்பிக்கின்றது.

1. **இன்றைய விசாரணையில் பொதுத் தகவல் அலுவலரால் சமர்ப்பிக்கப்பட்ட அப்போதைய பொதுத் தகவல் அலுவலரின் எழுத்துமூல விளக்கம் ஏற்புடையதல்ல என்பதை ஆணையம் பதிவு செய்து, தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 20(1)-ன் கீழ் ரூ.1,000/-(ரூபாய் ஆயிரம் மட்டும்) அபராதம் அப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு விதிக்கப்படுகிறது. அதனை அரசு கணக்குத் தலைப்பில் செலுத்திவிட்டு அது குறித்த அறிக்கையினை 16.09.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு அப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது. மேலும் அன்றைய தினம் தற்போதைய பொதுத் தகவல் அலுவலரும் ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகுமாறு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். CP 1258/F/2023</u>**

**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு</u>**

The Public Information Officer,
TamilNadu State Transport Corporation Coimbatore limited,
No.37, Mettupalayam Road, Coimbatore-641 043.

பொதுத் தகவல் அலுவலர்/
உதவி மேலாளர் (Mcop & கணினி),
தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கோ) லிமிடெட்,
ஈரோடு மண்டலம்,
45, சென்னிமலை,
ஈரோடு மாவட்டம்-638 001.

**அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் (25.04.2022 தேதிய)**
**திரு.சி.வைரவசுந்தரம்,**
**துணை மேலாளர், (தணிக்கை/கணக்கு),**
**தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம்(கோ)லிமிடெட்,**
**ஈரோடு மண்டலம்,**
**45, சென்னிமலை ரோடு,**
**ஈரோடு மாவட்டம்-638 001.**

**(தற்போதைய பொதுத் தகவல் அலுவலர் வாயிலாக)**

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

**<u>புகார்தாரர்</u>**

திரு.ரா.முத்துக்குமார், த/பெ.ராமலிங்கம்,
35, 3/w வடக்கு தெரு,
அய்யம்பட்டி, உத்தமபாளையம் தாலுகா,
மார்க்கையன் கோட்டை அஞ்சல்,
தேனி மாவட்டம்-625 515.

**<u>நகல்</u>**

மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (கோவை)லிமிடெட்,
எண்.37, மேட்டுப்பாளையம் ரோடு,
கோயம்புத்தூர் மாவட்டம்-641 043.

பதிவாளர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
சென்னை-35.(For Followup).
Copy to: File NS/PA-